**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC. 73/ 2021
Prosecution witness.0 4

| | |
|---|---|
| பெயர் : சச்சின் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 08th day of November 2024.

08.11.2024

(எதிரி ஆஜர் )

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

**1.** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். 16.02.2022ம் தேதி மதியம் 03.00 மணியளவில் முதுகுளத்தூரில் உள்ள ஜாகீர் உசேன் 2வது தெருவில் முதுகுளத்தூர் காவல் நிலைய போலிசார் நின்றுகொண்டு வரைபடம் வரைந்துகொண்டிருந்தார்கள். பிரச்சனை சம்பந்தமாக வரைபடம் வரைந்து கொண்டிருந்தார்கள். அதில் நான் கையெழுத்து செய்தேன். என்னுடன் காளிராஜனும் கையெழுத்து செய்தார். . என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். (**பார்வை மகசர் அசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது சொந்த ஊர் கமுதி அருகில் உள்ள செங்கற்படை கிராமம் என்றால் இல்லை. செல்லூர் அருகில் உள்ள செங்கற்படை கிராமம். எனது ஊருக்கும் முதுகுளத்தூருக்கும் எத்தனை கிலோமீட்டர் என்றால் 25 கி.மீ. இந்த வழக்கின் அ.சா.1 பிரேமலதாவை தெரியுமா என்றால் தெரியும். அ.சா.1ன் வீட்டில் நான்

டிரைவராக வேலை செய்தேன் என்றால் சரிதான். போலிசார் வரைபடம் வரைந்து எத்தனை மணி என்றால் 03.30 மணியவில் வரைபடம் வரைந்தார்கள். நான் எத்தனை கையெழுத்து செய்தேன் என்றால் இரண்டு கையெழுத்து செய்தேன். வரைபடம் வரைந்தது ஜாகீர் உசேன் இரண்டாவது தெரு என்றால் சரிதான். நான் கையெழுத்து போட்டதில் என்ன எழுதி இருந்தது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டுவிட்டு பொய்யாக சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து போட்டதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.